# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதி விசேஷமானது

අංක 2301/43 – 2022 ඔක්තෝම්බර් මස 13 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.10.13

*2301/43 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 யூலை மாதம் 20 ஆம் திகதிய 46 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 327 ஆம் இலக்க, 1979.06.08 ஆம் திகதிய கட்டளைக்கு உட்பட்டுள்ள காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் 1 அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்

எனது இல. : 03J75/E/611.
பி. செ. இல. : OPDS/LND/04/R.PAL.VI/09/04.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2022, ஒற்றோபர் 05.*

**அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், ஓபநாயக்க பிரதேச செயலாளர் பிரிவில், ஹெலபல்ல பலாத சிறு பிரிவில், மாதொல (இ.கி.வ. 203) கிராமத்தில் அமைந்துள்ள, நில*

*அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.12.19 ஆம் திகதிய* R/OPN/*2018/556 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை :*

*1.* **துண்டு 'B' - வடுகெஹேன்யாய - விஸ்தீரணம் : *0.0379* ஹெக்டயார்**

*வடக்கு : துண்டு* A, *வீதி மற்றும் துண்டு* C; *கிழக்கு: துண்டு இல. 1197, துண்டு* C *மற்றும் துண்டு இல. 230*$^{c}$; *தெற்கு : துண்டு 230*$^{c}$ *மற்றும் துண்டு இல. 230; மேற்கு: துண்டு இல. 230 மற்றும் வீதி.*

EOG *10-0105*